
**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 4 இதழ் 1, 2023**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத்தரப்புத்தக எண்: 978819 4845959**
**இணையதளம்: https://restpublisher.com/book-series/ctll/**
**DOI: https://doi.org/10.46632/ctll/4/1/6**



# உயர்க்காதலும் சிலப்பதிகாரமும்

**பா. இராஜா**
*திருக்கோவிலூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி – திருக்கோவிலூர், தமிழ் நாடு, இந்தியா.*
மின்னஞ்சல்: rr351573@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
காப்பியங்களில் தலைசிறந்த நூலான சிலப்பதிகாரத்தில் வரும் பெண்கதாபாத்திரங்களின் காதல் நிலையை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது..
காதல் என்பதே உயர்வுதான்.. இதில் யாருடைய காதல் உயர்வென்று ஆராய்வது சான்றோர்க்கு அழகன்று..
காப்பிய தேவிகளின் காதலை இளங்கோவின் துணையோடு காண்போம் !.

## 1. முன்னுரை

" காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி " என்றவரிகளில் இறைவனை அடைவதற்கான வாயிலாகவேக் காதலை காட்டுகிறார் திருஞானசம்பந்தர் .

சங்கம் தொட்டு இன்றுவரை எழுதப்படும் அனைத்து இலக்கியங்களும் ஏதோ ஓர் இடத்தில் காதலால்தான் நகர்கிறது !. இங்கு பெருங்காப்பியத்தின் முதன்மை காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் காதலை எவ்விதம் இளங்கோவடிகள் காட்சிப்படுத்தியுள்ளார் என்பதை இக்கட்டுரை வாயிலாக ஏதோ ஓரளவிற்கு ஞாயப்படுத்த முயன்றுள்ளேன்

## 2. இலக்கியமும் காதலும்

தமிழின் உயர்ந்த இலக்கியங்கள் யாவுமே காதல் தந்த பிச்சை எனலாம். அகம் சார்ந்த இலக்கியங்கள் யாவுமே காதலைப் பற்றி பேசுகின்றன.

" சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவேன்
பிறப்பு பிறிது ஆகுவதாயின்
மறக்குவேன் கொள் என் காதல் எனவே " (நற்றிணை 397)

என்ற வரிகளில் தலைவி சாவதற்கு கூட அஞ்சவில்லை எங்கு இறந்து மீண்டும் பிறக்கையில் தலைவனை மறந்து விடக் கூடுமோ என்று அஞ்சுவதாக அம்மூவனார் கூறுகிறார்.

"யாயும் ஞாயும் யாராகிரோ, எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே!." (குறுந்தொகை 40)

என்ற வரிகளில் காதலின் ஆழத்திற்கு நம்மை தள்ளி விடுகிறார் கவிஞர் செம்புலப் பெயல்நீரார்.

மனிதர்களுக்கு மட்டுமல்ல இறைவனுக்கே கூட காதல் பாடல் தந்த மொழி நம் தமிழ் மொழி:

" எண்ணரு நலத்தினாள் இணையல் நின்றுழி
கண்ணோடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள் "
(கம்பராமாயணம், பாலகாண்டம், மிதிலை -35)

என்ற வரிகளில் இராமனும் சீதையும் விழிகளால் காதலித்ததை கண்முன் கொண்டு வருகிறார் கம்பர்.

இறைவனுக்கு மாலை சாற்றி இறைவனையே தனதாக்கிக் கொண்டவள் ஆண்டாள் நாச்சியார். அந்த ஆண்டாள் நாச்சியார் இயற்றிய நாச்சியார் திருமொழியின் 59 ஆவது பாடல் இது.

"வாய் நல்லார் நல்ல மறையோதி
மந்திரத்தால் பாசிலை நாணல் படுத்து பரிதிவைத்து
காய் சின மா களிறு அண்ணா னென் கைப்பற்றி
தீவளம் செய்ய கனா கண்டேன் தோழி நான்!"

என்னும் பாடல் தலைவி ஆகிய ஆண்டாள், தலைவன் கண்ணனை திருமணம் செய்ததாக கனவு கண்டதாய் தன் தோழியிடம் கூறுவதாக உள்ளது..

இந்த இலக்கியங்கள் எல்லாம் கூறிவிட்டு திருக்குறளை விடுவது சரி ஆகாதல்லவா இதோ ஓர் குறள்..

"இருநோக்கு இவளுன் கண்உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள்-1091)

காதலி பார்க்கும் பார்வை ஒரு பார்வை நோயைத் தரக்கூடியது, மற்றொறு பார்வை அந்நோய்க்கு மருந்தாய் அமையக்கூடியது! என்னே வள்ளுவனின் கற்பனைத்திறன்!..

இங்கு நாம் பார்க்கப் போகும் சிலப்பதிகாரமும் பல காதல் வழிகளை கூறுகிறது.

இந்த சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுத்தாளர் ஜெயமோகன் "கொற்றவை" என்ற நவீன கால நாவல் ஒன்றையும் இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது!.

## 3. கண்ணகிக் காதல்

மங்கள வாழ்த்தில் அறிமுகமான கண்ணகிக்கும் கோவலனுக்கும் அதே காதையில் பெரியோர்களால் நிச்சயித்து திருமணம் நிகழ்ந்து இன்புற்று வாழ்கின்றனர்..

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவளம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை "

தொடர்ந்து வருகின்ற மனையறம்படுத்தல் காதை கோவலனுக்கும் கண்ணகிக்கும் ஆன கூடலை கண்முன்னே காட்சிப்படுத்தும் அதிலும் கண்ணகியை நோக்கி கோவலன் வர்ணிப்பதெல்லாம் அழகியலின் உச்சம்!..

" மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே!
காசரு விரையே !கரும்பே தேனே !
அரும்பெரர் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழ்இடைப் பிறவா இசையே என்கோ? தாழ்இருங் கூந்தல் தையால் நின்னை "

இவ்விதம் கூடி இன்புற்று இருவரும் சில ஆண்டுகள் வாழ்ந்தனர். அதன் பின் கோவலன் மாதவியை சேர்ந்தான். கோவலன் மீண்டு வர நீராடி பூசை செய்ய வேண்டும் என்று தோழி தேவந்தி கண்ணகியிடம் கூற, முதல்முறையாக காப்பியத்தில் "பீடன்று" என்று கண்ணகி பேசுகிறாள். இவ்விதம் கண்ணகி பேசுவது அவள் தன்னுடைய காதல் மீது கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

திரும்பி வந்த கோவலனோடு சேர்ந்து மாநகர் மதுரை புகுந்து மாதரி வீட்டில் அடைக்கலம் பெற்று, அங்கிருந்து கோவலன் கண்ணகியின் சிலம்பை பெற்று, அதனை விற்க முயன்று கொலைகளைப் படுகிறான் அதன் பின் கண்ணகி செய்த செயல் உலகறியும். இறந்த கணவனுக்கு நீதி பெற்றாள் அந்த கற்புக்கரசியாம் கண்ணகி!

" தேரா மன்னா! செப்புவது உடையேன்;
எள் அறு சிறப்பின் இமையவர் வியப்ப,
புள் உறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயில் கடை மணி நடு நா நடுங்க,
ஆவின் கடை மணி உகு நீர் நெஞ்சு சுட, தான் தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என் பதியே; அவ் ஊர்,
ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்கொடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி,
வாழ்தல் வேண்டி, ஊழ்வினை துரப்ப,
சூழ் கழல் மன்னா! நின் நகர்ப் புகுந்து, இங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;

கண்ணகி என்பது என் பெயரே' என- "

.... "கண்ணகி அணி மணிக் கால் சிலம்பு உடைப்ப,

மன்னவன் வாய்முதல் தெறித்தது, மணியே- மணி கண்டு,

தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,

'பொன் செய் கொல்லன்-தன் சொல் கேட்ட

யானோ அரசன்? யானே கள்வன்;

மன்பதை காக்கும் தென் புலம் காவல்

என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்! என

மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே- தென்னவன் "

என்னே கண்ணகியின் திறம் !

மாதவி மனக்காதல் :

அரங்கேற்று காதையில் அறிமுகம் ஆகிறாள் மாதவி. தேவலோகத்தை சார்ந்த ஊர்வசியை போன்ற அழகுடையவள். ஆடல், பாடல், அழகு என்று மூன்றிலும் சிறந்து விளங்குபவள். பச்சை மாலையையும் தலைக்கோலையும் வென்ற ஆடல் அரசி கணிகையர் குளத்துப் பெண், பரத்தை வழி தோன்றல். இவள் கலையில் மயங்கிய கோவலன் 1008 கழஞ்சுப் பொன் கொடுத்து இவளை அடைந்தான்.

தொடர்ந்து பல பொழுதுகள் கோவலனும் மாதவியும் ஒன்றிணைந்து கழித்தனர்.

"கலவியும் புலவியும் காதலருக்கு அளித்து, ஆங்கு

ஆர்வ நெஞ்சமொடு கோவலருக்கு எதிரிக்

கோலம் கொண்ட மாதவி அன்றியும்! "

கோவலனும் மாதவியும் கூடிக்களித்து மகிழ்ந்தனர். மாதவியின் மனக் காதலில் கோவலனை மட்டுமே எண்ணினாள். கோவலன் மீது மட்டுமே காதல் கொண்டாள். தன் உள்ளத்தை கோவளனுக்கே உரித்தாக்கினாள்..

இந்திர விழா, கடலாட்டு என்று இன்பம் பொங்கி மழை சொரிந்த இவர்கள் வாழ்வில் கானல்வரி திசை மாற்றியது..

யாழொடு கோவலன் பாடிய கானல் வரிக்கு எதிர் பாட்டு பாடிய மாதவியின் வரியினை, வேறொரு ஆடவனை எண்ணி அவள் பாடுகிறாள் என்று நினைத்தான் கோவலன்.. அவள் தாயிடம் முன்னரே செல்வங்களை இழந்த கோபத்தோடு மாதவியையும் வெறுத்து அவளை விட்டு நீங்கனான் கோவலன்..

கோவலன் நீங்கியப்பின் மாதவியும் தன் உலக வாழ்வின் மீது பற்று நீங்கி துறவறம் மேற்கொண்டாள்! தனக்குப் பிறந்த குழவியைக்கூட துறவு வாழ்வை மேற்கொள்ள வைத்தாள்.. மாதவியின் நேர்மை! தூய்மை!..

இழிகுளத்தில் பிறந்தாலும், நன்னெறியும் கற்பு நெறியையும் தவறாமல் மாதவியை மாதரசியாய் மாற்றியது !

## 4. கோப்பெருந்தேவியின் காதல்

முன்னர் கண்ட இருகாதலைக் காட்டிலும் கோப்பெருந்தேவியின் காதல் கூடுதல் சிறப்பானது !..

தன் கணவனாகிய வேந்தன், ஆடல் மகளின் அழகில் மயங்கியதைக் கண்டு ஊடல் கொண்ட தேவி அதனை வெளியேக் கூடக்கூறத் தயங்கி, தலைவலி என்று பொய் கூறி அரசனை நீங்கி அந்தப்புரம் சென்றது!,

தீக்கனவுக் கண்டு நெஞ்சம் பதைத்து விரைந்து அரசவை நோக்கி சென்று அதை அரசனிடம் கூறியது,

தன் சிலம்பால் இவ்வளவு பெரிய அநீதி நேர்ந்து மதுரை அழிந்து, அதன் காரணியாய் மன்னன் வீழ்ந்தான் என்று உணர்ந்த நொடி கணவனின் காலடியிலேயே உயிரை விட்ட தீர்க்கதரிசி கோப்பெருந்தேவியின் காதலும், கருணை உள்ளமும் சொல்லில் அடங்காதவை!...

கற்பனை சிகரத்தை எட்டி நிற்பவை!

"கணவனை இழந்தோர்க்கு காட்டுவ தில்லென்று,
இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி !".

நிறைவுரை :

இந்த மாபெரும் உலகத்தில் உள்ளது வெறும் இரண்டே இரண்டு உணர்ச்சி தான்..

ஒன்று சுகம்! மற்றொன்று பரம சுகம்!..

இரண்டையும் தரக்கூடியது காதல். கண்ணகியின் காதல் விழிகளில் நீர் துளி சிந்த வைக்கும். மாதவியின் காதல் நம் மெய்யை சிலிர்க்க வைக்கும். கோப்பெருந்தேவியின் காதலோ நம் உயிரையே சிலிர்க்கவைக்கும். காதல் காதல்தான்! அதற்கு வேறு சாயம் வேண்டாம்! காதல் வழியே சிலம்பை கண்டோம் !.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் " என்ற மகாகவியின் கூற்று மிகச்சரியானதே !.

வாழ்க தமிழ்!

வாழ்க சிலப்பதிகாரம் !

வாழ்க இளங்கோவின் புகழ் !...

நன்றி !

துணைநூற்பாட்டியல் :

சிலப்பதிகாரம் உரை :புலியூர்க் கேசிகன்,
சாரதா பதிப்பகம், சென்னை 14.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்